
தலைநகரில் விபச்சாரம், சூதாட்டம்

# முற்றாகத் துடைத்தொழிக்கப்படும்

பிரதமர் திட்டவட்டம்





**கோலாலம்பூர், ஜூலை 12-**

**தலைநகரில் விபச்சாரம், சூதாட்ட நடவடிக்கைகளை மடானி அரசாங்கம் முற்றாகத் துடைத் தொழிக்கும் எனப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.**

முந்தைய அரசாங்கம் இவ்விரண்டு நடவடிக்கைகளுக்கு எதிராகப் பல்வேறு அதிரடிச் சோதனைகளை மேற்கொண்டாலும்கூட அவை இன்னும் தொடர்ந்து இருந்து வருவதாகக் கூறிய அவர், கடந்த ஆண்டு முதல் மேற்குறிப்பிட்ட இரண்டு நடவடிக்கைகளை முற்றாகத் துடைத்தொழிப்பதற்கான தீவிர முயற்சியில் மடானி அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்குக் கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா, கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோ கமாருல்ஸமான் மாட் சாலே ஆகியோர் முக்கியப் பொறுப்பேற்பார்கள். காரணம் இவ்விவகாரம் முந்தைய அரசாங்கம் உட்பட இன்று வரை தொடர்ந்து நீடித்து வருவதாகவும் அவர் கூறினார்.

இவ்விவகாரம் பற்றி பேசிக்கொண்டிருக்கும் வேளையில் அது இன்னும் தலைநகரில் தழைத்தோங்கி வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

நேற்று தலைநகரில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக் கான மடானி ஆய்வரங்கைத் தொடக்கி வைத்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

கோலாலம்பூரில் விபச்சாரமும் சூதாட்டமும் தொடர்ந்து இருந்து வருவதற்கு கையூட்டு விவகாரமும் ஒரு காரண மாகும் எனவும் பிரதமர் சொன்னார்.

இந்தோனேசிய அரசாங்கம் சுராபாயாவில் உள்ள விபச்சார மையத்தை மூடியுள்ள வேளையில் கோலாலம் பூரில் விபச்சாரமும் சூதாட்ட நடவடிக்கையும் தொடர்ந்து இருந்து வருவது குறித்து கருத்துரைக்குமாறு கேட்டபோது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விவகாரம் குறித்து ஊராட்சி மன்ற அமலாக்கப் பிரிவினர் மீது மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் விசாரணை செய்யுமா என அவரிடம் கேட்டபோது, அது மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

தலைநகரில் விபச்சாரத்தை முற்றாகத் துடைத்தொழிப் பதற்கு கோலாலம்பூரில் பணிப்படை முக்கியப் பங்காற்ற வேண்டும் என கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா கடந்த மாதம் கூறியிருந்தார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் உட்பட குறிப்பிட்ட சில அமலாக்கப் பிரிவுகளுடன் ஒத்துழைக்கும் வகையில் கடந்த மே மாதம் இந்தப் பணிப்படை அமைக்கப்பட்டது.

கோலாலம்பூரில் கள்ளக் குடியேறிகளைத் துடைத் தொழிப்பதிலும் இப்பணிப்படை முக்கியப் பங்காற்றும் எனவும் கூறப்பட்டது.